بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்-அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 14 March 2014 (Tamil)**

## பாவங்களிலிருந்து ஈடேற்றம் பெறுவதற்கான வழிமுறைகள்

**தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

சில ஜுமுஆக்களுக்கு முன்பு வரை நான் செயல் அளவிலான சீர்திருத்தத்தின் வழிமுறைகளைப் பற்றி சில குத்பாக்களைக் கொடுத்திருந்தேன். அதில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வைப் பற்றி நமக்கு முன்னால் எவ்வாறு எடுத்து வைத்தார்கள்? இறைஞானம் மற்றும் இறையன்பைப் பெறுவதற்கான என்ன வழிமுறைகளைக் கூறி இருக்கிறார்கள்? அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அன்னார் (அலை) எவ்வாறு வழிகாட்டல் வழங்கி இருக்கிறார்கள்? அவ்வாறே இறைவனின் புத்தம் புதிய வார்த்தைகள், மற்றும் அல்லாஹ் அன்னார் (அலை) அவர்களுக்காக காட்டிய அற்புதங்களும் அடையாளங்களும் எவ்வாறு நிறைவேறின? ஆகியவற்றைப் பற்றி அந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது. இவை நமது ஈமான் மற்றும் செயலின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைவதற்காக இவற்றைப் பற்றிய ஞானத்தை நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்களின் ஒளியில் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எனவே இன்று இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எழுத்துகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் சில முன்மாதிரிகளை எடுத்துரைப்பேன். அவற்றில் அவர்கள் இறைஞானத்தைப் பற்றிய வழிகாட்டல்களை வழங்கி இருக்கிறார்கள். இது தொடர்பாக மட்டுமே அன்னார் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை எடுத்துரைத்தால் அவை இருபதுக்கும் மேற்பட்ட - இன்னும் சொல்லப்போனால் ஆழமாக சென்று பார்த்தால், நூற்றுக்கணக்கான பக்கங்கள் இது தொடர்பாகக் கிடைக்கின்றன. ஆயினும் நான் கூறியது போன்று இறைஞானம் என்பது என்ன? என்பதைப் பற்றி நமக்கு வழிகாட்டுகின்ற சில மேற்கோள்களை முன்மாதிரியாக இன்று நான் உங்கள் முன் வைப்பேன்.

**இறைவன் வரை சென்றடைவதற்கான வழிமுறையைப் பற்றி வழிகாட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

‘‘மனிதன் இறைவன் வரை சென்றடைவதற்கு இரண்டு விஷயங்கள் தேவைப்படுகின்றன. ஒன்று, தீமையிலிருந்து விலகி இருத்தல்; இரண்டாவது, நன்மையான செயல்களைப் பெறுதல். வெறும் தீமையை விட்டு விடுவது ஒன்றும் திறமை அன்று. எனவே உண்மை விஷயம் என்னவென்றால், மனிதன் பிறந்த காலத்திலிருந்து இந்த இரண்டு ஆற்றல்களும் அவனுடைய இயல்பினுள் காணப்படுகின்றன. ஒருபக்கம் மன உணர்ச்சிகள் அவனை பாவத்தின் பக்கம் ஈர்க்கின்றன. மறு பக்கம் வெளிப்படையான நெருப்பு வெளிப்படையான வைக்கோலை எரித்து விடுவது போன்று, அவனிடம் மறைந்திருக்கின்ற இறையன்பு எனும் நெருப்பு அந்தப் பாவத்தை எரித்து விடுகிறது. ஆனால் பாவங்களை எரிக்கின்ற அந்த நெருப்பு மூட்டப்படுவது இறைஞானத்தைச் சார்ந்துள்ளது. இறைஞனம் இருந்தால்தான் (பாவங்கள்) எரிய முடியும். ஏனெனில் ஒவ்வொன்றின் மீதுள்ள அன்பு, நேசம் என்பது அதைப் பற்றிய ஞானத்துடன் தொடர்புடையதாகும். ஒன்றைப் பற்றிய அழகு மற்றும் மேன்மை தொடர்பான ஞானம் உங்களுக்கு இல்லை என்றால் அதன் மீது நீங்கள் அன்பு கொள்ள முடியாது. எனவே மகத்துவமுள்ள இறைவனின் மேன்மை, அழகு, எழில் ஆகியவற்றைப் பற்றிய ஞானம் அவனைப் பற்றிய அன்பை உருவாக்குகிறது. மேலும் (இறை) அன்பு எனும் நெருப்பினால்

பாவங்கள் எரிகின்றன. ஆனால் அந்த இறைஞானம் பொது மக்களுக்கு நபிமார்கள் மூலமாகக் கிடைக்கின்றது என்பதே அல்லாஹ்வின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. (நபிமர்களாகிய) அவர்களின் ஒளியிலிருந்து (மக்களாகிய) அவர்கள் ஒளியைப் பெறுகின்றனர். மேலும் (நபிமார்களாகிய)அவர்களைப் பின்பற்றுவதனால் அவர்களுக்கு வழங்கப்பட்டவை அனைத்தையும் (மக்களாகிய) அவர்கள் பெற்று விடுகின்றனர்.''

**பிறகு அல்லாஹ்வைப் பற்றிய ஞானம், பாவங்களிலிருந்து ஈடேற்றம், நன்மைகளை செய்வதற்கான நல்வாய்ப்பு துஆவின் உயர்ந்த நிலை ஆகியவை குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''உண்மை என்னவெனில், இறைவனின் அருளினாலும், கருணையினாலும் அவனைப் பற்றிய ஞானம் கிடைக்காத வரை-அவனிடமிருந்து ஆற்றல் கிடைக்காத வரை எந்தவொரு மனிதனும் உண்மையிலேயே பாவத்திலிருந்து ஈடேற்றம் பெற முடியாது; உண்மையான முறையில் இறைவனை நேசிக்கவும் முடியாது; உரிய முறையில் அவனைப் பற்றி அச்சப்படவும் முடியாது. ஒவ்வோர் அச்சமும், அன்பும் ஞானத்தினாலேயே கிடைக்கிறது என்பது மிகவும்வெளிப்படியான விஷயமாகும். உலகத்தில் மனிதன் எவற்றின் மீது உள்ளத்தை ஈடுபடுத்த வைக்கிறானோ, அன்பு கொள்கிறானோ, அவற்றின் மீது அன்பு கொள்கிறானோ அல்லது அவற்றிற்கு அஞ்சுகிறானோ- தூரம் விலகி ஓடுகின்றானோ ஆகிய இவ்வனைத்து நிலைகளும் மனிதனின் உள்ளத்தில் அவற்றைப் பற்றிய ஞானத்தைப் பெற்ற பிறகே உருவாகின்றன. ஆயினும் அல்லாஹ்வின்அருள் இல்லாதவரை இறைஞானம் கிடைக்க முடியாது என்பதும், இறைவனுடைய அருள் இல்லாமல் பயனுள்ளதாக ஆக முடியாது என்பதும், இறையருளின் மூலமாகவே இறைஞானம் கிடைக்கிறது என்பதும் உண்மையாகும்.........நாமும் நாள்தோறும் துஆ செய்கின்றோம்; நாம் தொழுகின்ற எல்லா தொழுகைகளும் துஆக்கள்தானே என நினைக்காதீர்கள். ஏனெனில் இறைஞானத்திற்குப் பிறகு இறையருளின் மூலமாக உருவாகின்ற துஆ வேறு விதமானதும் வேறு நிலையை கொண்டதும் ஆகும். **அது மாய்த்து விடக் கூடிய ஒன்றாகும். அது உருக்கக் கூடிய நெருப்பாகும். அது இறைவனின் கருணையை ஈர்க்கக் கூடிய காந்த சக்தியாகும். அது மரணமாகும்; ஆயினும் அது கடைசியில் உயிரூட்டுகிறது. அது கடுமையான வெள்ளப் பெருக்காகும்; ஆயினும் அது கடைசியில் கப்பலாகி விடுகின்றது**. ஒவ்வொரு சீர்குலைந்த விஷயமும் அதன் மூலம் சீரடைந்து விடுகிறது. ஒவ்வொரு விஷமும் கடைசியில் அதன் மூலம் விஷ முறிவாக மாறி விடுகிறது. இது இறைஞானத்தின் அந்தஸ்தாகும்.''

தொடர்ந்து **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' நாவினால் இறைவனை ஏற்றுக் கொள்ளும் பலர் இருக்கின்றனர். ஆனால்நீங்கள் சீர்தூக்கிப்பார்த்தால் அவர்களிடம் நாத்திகம் இருக்கின்றது என்பது தெரிய வரும். ஏனெனில் அவர்கள் உலக வேலைகளில் ஈடுபடும்போது இறைவனின் தண்டனை பற்றியும், அவனது கம்பீரத்தைப் பற்றியும் முற்றிலும் மறந்து விடுகிறார்கள். துஆவின் மூலமாக அல்லாஹ்வின் ஞானத்தை நீங்கள் வேண்டுவது மிக அவசியமானதாகும். அது இல்லாமல் முழுமையான நம்பிக்கை ஒருபோதும் கிடைக்க முடியாது. மேலும் அது, **'அல்லாஹ்விடமிருந்து தொடர்பைத் துண்டிப்பது ஒரு மரணமாகும்'** என்ற ஞானம் இருக்கும்போதுதான் கிடைக்க முடியும். பாவங்களிலிருந்து துஆ செய்கின்ற அதே நேரத்தில் அத்துடன் திட்டங்களையும் கைவிட்டு விடாதீர்கள். மேலும் எந்த கூட்டங்களில், சபைகளில் கலந்து கொள்வதால் பாவம் பற்றிய தூண்டுதல் ஏற்படுமோ அவற்றை விட்டு விடுங்கள். அத்துடன் துஆக்களும் செய்து கொண்டிருங்கள்.''

**பிறகு இறைஞானம் இல்லாமல் பாவங்களிலிருந்து தப்பித்தல் என்பது சாத்தியமில்லை என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' மனிதன் முழுமையான முறையில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்ளும்போதுதான் அவனுக்கு பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கான நல்வாய்ப்பு கிடைக்கிறது. பாவத்தின் பிடியிலிருந்து ஈடேற்றம் பெறுவதுதான் மனித வாழ்வின் மிகப் பெரும் குறிக்கோளாகும். பாருங்கள். அழகாகத் தெரிகின்ற ஒரு பாம்பை ஒரு குழந்தை கையால் பிடிக்க ஆசைப்படலாம்; கையையும் போடலாம். ஆனால் பாம்பு கடிக்கும்; அது நாசமாக்கி விடும் என்று அறிகின்ற ஓர் அறிவாளி அதன் பக்கம் செல்ல ஒருபோதும் தைரியம் கொள்ள மாட்டார். இன்னும் சொல்லப்போனால், ஒரு வீட்டில் பாம்பு இருக்கிறது என அவருக்கு தெரிய வந்தால் அதிலும் அவர்

நுழைய மாட்டார். அவ்வாறே அழிவிற்குள்ளாக்கும் ஒன்றாக அவர் கருதும் விஷத்தை சாப்பிட அவர் தைரியம் கொள்ள மாட்டார். அவ்வாறே பாவத்தை அபாயமான விஷம் என உறுதி கொள்ளாத வரை அதிலிருந்து அவர் தப்பிக்க முடியாது. இந்த நம்பிக்கை இறைஞானம் இல்லாமல் உருவாக முடியாது.''

பிறகு இன்னோடத்தில் **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

'' மார்க்கத்தின் வேர், இறைவனை தெரிந்து கொள்வதும், இறையருள்களை அறிந்து கொள்வதும் ஆகும். அதன் கிளைகள் நற்செயல்களாகும்; அதன் மலர்கள் உயர்ந்த நல்லொழுக்கங்களாகும். அதன் கனிகள் ஆன்மீக அருள்களும், இறைவனுக்கும் இறையடியாருக்கும் இடையில் உருவாகும் மிக நுட்பமான அன்பும் ஆகும். மேலும் அதன் கனிகளிலிருந்து பயன்பெறுவது ஆன்மீக பரிசுத்தத்திற்கும், தூய்மைக்கும் வழிகோலுகிறது. அன்பின் முழுமைதன்மை இறைஞானத்தின் முழுமைத்தன்மையால் உருவாகின்றது. மேலும் இறையன்பு இறைஞானத்திற்கேற்ப பீரிட்டெழுகிறது. **மேலும் சொந்த அன்பு உருவாகும்போது, அந்த நாள்தான் புதிய பிறப்பின் முதல் நாள் ஆகும்; மேலும் அந்த நேரம்தான் புதிய உலகத்தின் முதல் நேரமாகும்.''**

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''இறைவன் ஒரு முத்து ஆவான். அவனைப் பற்றிய ஞானத்திற்குப் பிறகு மனிதன் உலகப் பொருள்களை எப்படிப்பட்ட அற்பமாகவும், இழிவாகவும் பார்க்கின்றான் என்றால், அதைப் பார்ப்பதற்கும் அவனுடைய இயல்பின் மீது ஒரு கட்டாயத்தையும், வற்புறுத்தலையும் செய்ய வேண்டி வருகிறது. எனவே இறைஞானத்தை விரும்புங்கள்; அவன் பக்கமே காலெடுத்து வையுங்கள். இதில்தான் வெற்றி இருக்கிறது.''

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:**

''மனிதனின் இறையச்சமும் இறைநம்பிக்கையும், இறைவணக்கமும், தூய்மையும் ஆகிய இவையெல்லாம் வானத்திலிருந்து வருகின்றது. மேலும் இது இறை அருளைச் சார்ந்ததாகும். அவன் விரும்பினால் அதை அவன் நிலைபெறச் செய்யலாம்; அவன் விரும்பினால் அதை அவன் விலக்கி விடலாம். எனவே மனிதன் தனது நஃப்ஸை பறிக்கப்பட்ட ஒன்றாக - ஒன்றுமற்றதாக கருதுவதும், இறைசந்நிதியில் வீழ்ந்து பணிவுடனும், தன்னடக்கத்துடனும் இறையருளை தேடுவதும், மன இச்சைகளை எரித்து விடுகின்றதும், உள்ளே ஓர் ஒளியையும் நன்மைகளுக்கான ஓர் ஆற்றலையும் வெப்பத்தையும் உருவாக்குகின்றதுமான அந்த இறைஞானத்தின் ஒளியை வேண்டுவதும் ஆகிய இவற்றிற்குத்தான் உண்மையான இறைஞானம் என்று பெயர். பின்னர் அவனுடைய அருளினால் அவருக்கு பங்கு கிடைத்து விட்டால், ஏதாவதொரு நேரத்தில் ஏதாவதொரு வகையான மன அமைதியும் மன ஆறுதலும் கிடைத்து விட்டால் அதற்காக ஆணவமோ பெருமையோ கொள்ளக் கூடாது. மாறாக, அவருடைய பணிவிலும் தன்னடக்கத்திலும் மேலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். ஏனெனில் எந்த அளவுக்கு அவர் தன்னை ஒன்றுமற்றவராகக் கருதுவாரோ அதே அளவுக்கு படித்தரங்களும், ஒளிகளும் இறைவனிடமிருந்து அவர் மீது இறங்கும்; அவை அவருக்கு மேலும் ஒளியையும், ஆற்றலையும் வழங்கும். மனிதன் இந்த நம்பிக்கை கொள்வானென்றால் அல்லாஹ்வின் அருளால் அவனுடைய நல்லொழுக்க நிலைகள் அருமையானதாகி விடும் என நம்பலாம். பிறகு அவர் தன்னை ஒரு பொருட்டாகக் கருதுவதும் ஆணவமாகும் என நினைப்பார்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் இறுதியாகக் கூறினார்கள்:

ஆக, இறைவனைப் பற்றிய இத்தகைய ஞானத்தை நம்மிடம் உருவாக்க வேண்டும் என்ற இந்த குறிக்கோளுக்காகத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றினார்கள். ஆக, நாம் இறைவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்ற நம்பிக்கையுடன் நமது ஒவ்வொரு செயலையும் இறையன்பு, இறையச்சம் ஆகியவற்றை முன் நிறுத்தியவாறு நிறைவேற்ற வேண்டும். நமது எல்லா பாவங்களையும் எரித்து விடுகின்ற அளவிலான அப்படிப்பட்ட ஓர் இறைஞானம் நம்மிடம் உருவாக வேண்டும். மேலும் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தின் குறிக்கோளை நிறைவேற்றுபவர்களாக மாற வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த அனைத்து விஷயங்களின்படி செயல்படக்கூடிய, இதன் உயிர்நாடியைப் புரிந்து கொள்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**, **Translated By *O.M. Muzzammil Ahmad***